# IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, DHARMAPURI

## O.S.No. 201 of 2021

**வாதி தரப்பு சாட்சி 1 (P.W.1):** திரு. சுதாகர் **Date: 06.11.2025**

**குறுக்கு விசாரணை: (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)**

வழக்கு பாகப்பிரிவினைக்காக போட்டுள்ளேன். நான் பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். என் பிரமாண வாக்குமூலத்தில் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வெதரம்பட்டி கிராமத்தில் குடியிருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிறந்த ஊர் ஆகும். பெங்களூரில் நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். 1ம் பிரதிவாதி என் அப்பா, 2ம் பிரதிவாதி என் சித்தப்பா ஆவார்கள். தாவா சொத்து என் அப்பாவின் தாத்தாவின் அப்பா சென்னனுக்கு பாத்தியப்பட்டது. தாசன் என்பவர் 12.03.2005ல் இறந்துவிட்டார். தாவா சொத்தின் விவரம் 402/2 ல் 3 ஏக்கர் 6 சென்ட், 402/7 ல் 86 சென்ட், 402/4 ல் 11 சென்ட். தாவா சொத்தின் செக்குபந்தி எனக்கு அவ்வளவாக தெரியாது. தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கில் 3,4 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத 3ம் நபர்கள் என்றால் சரிதான். சிட்டாவில் அவர்களுடைய பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்த காரணத்தினால் அவர்களை தரப்பினராக காட்டியுள்ளேன். தாவா சொத்தை கேட்டு பெரியவர்களை வைத்து பைசல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாய்மொழியாகத்தான் கூறினார்கள். அந்த சொத்து என்னுடைய சுவாதீனத்திற்கு விடப்படவில்லை. நான்

பெங்களூரில் குடியிருப்பதால் தாவா சொத்தை பாராதீனம் செய்துவிடுவேன் என்ற காரணத்தினால் பெரியவர்கள் அனைவரும் அந்த சொத்தை பொறுத்து சுவாதீனம் கொடுக்காமல் நிறுத்திவைத்திருந்தார்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் என் அப்பாவும் என் சித்தப்பாவும் நல்ல உறவில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உறவுகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தினால் எனக்கு சொத்து தற்போது சுவாதீனம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**(1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in the open court. Read over to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 06.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.06 17:12:20 +0530

Principal District Judge, Dharmapuri.